# கொவிட் -19 கிழமை பாடசாலை ( சப்ரகமுவ)

## பாடம் - சுகாதாரம்

## தரம் - 09

## மார்ச் - 2வது கிழமை

### 06. வலைப்பந்தட்டத்தில் ஈடுபடுவோம்.

வலைப்பந்தட்ட வரலாற்றை நோக்கும் போது ஆரம்பத்தில் இது பெண்களிடமே பிரபல்யமாகியிருந்தது. தற்போது ஆண்களும் இவ் விளையாட்டில் ஈடுபடுவது குறிப்பிடத்தக்கது. வலைப்பந்தட்ட விளையாட்டில் மொத்த வீரர்களின் எண்ணிக்கை =12 ஆகும். ஆனால் ஒரு அணியில் இடம் பெறுவர் = 07 பேர்.

**வலைப்பந்தட்டத்தின் திறன்கள்**

- பந்தை கட்டுப்படுத்தல்.
- பாத அசைவு.
- தாக்குதல்.
- பாதுகாத்தல்.
- ஏறிதல்.

❖ ***தாக்குதல் -*** மத்திய ஏறிகையுடன் ஆரம்பமாகும். மத்திய ஏறிகையிலிருந்து பேற்றுக்கு எய்தல். வரையில் உபாயங்களைப் பிரயோகித்துத் தமதணி வீராங்கனைகளிடயே பந்தைப் பரிமாறியவாறு எதிரணி வீராங்கனைகளைக் கடந்து சென்று பேற்றுக்குக் கெய்தலின் மூலம் புள்ளியொன்றைப் பெற வேண்டும். இவ்வாறு கொண்டு செல்லப்படுதல் தாக்குதல் எனப்படும்.

❖ ***பாதுகாத்தல்*** - எதிரணி வீராங்கனைகள் தமக்கிடையே பந்தைப் பரிமாறியவாறு சென்று புள்ளியொன்று பெறும் சந்தர்ப்பத்தை தடுப்பது அல்லது தாமதப்படுத்துவதே பாதுகாத்தலின் நோக்கமாகும்.

**பாதுகாத்தல் முறைகள் 03**

1. வீராங்கனையைக் காத்தல்.
2. பந்தைக் காத்தல்.
3. இடங்காத்தல்.

❖ ***பந்தைப் பேற்றுக்குக் கெய்தல்*** - வலைப்பந்து விளையாட்டின் வெற்றி தோல்வி பெறப்படும் புள்ளிகளால் தீர்மாணிக்கப்படுகின்றது. இதனால் சரியாக எறிவது கட்டாயமாகும்.

**பயிற்சி**

1. தாக்குதல், பாதுகாத்தல் விளையாட்டு பயிற்சிக்கான செயற்பாடுகள் 02னை குறிப்பிட்டு வரைந்து காட்டுக.
2. பேற்றுக்குக் கெய்தல் சரியான பயிற்சிகளை படிமுறையில் குறிப்பிடுக.
3. தாக்குதல், எய்தலின் போது ஏற்படும் தவறுகள் எவை?